05.02.2020

அ.வ.எண். 54/2017

வா.சா. 1 ராஜி

**1 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1 முதல் 12 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய சொத்தை தற்போது வரை பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்குரையுடன் நான் ஒரு மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புலவரைபடமும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டு வரைபடங்களுக்கும் வேறுபாடு உள்ளதாக என்றால் இல்லை அப்படியேதான் உள்ளது. தாவா சொத்துக்கு மேற்கு பக்கம் ஒரு வழி உள்ளது என்றால் இல்லை . தென் வடலாக வழி உள்ளது. தாவா சொத்துக்கு வடக்கு பக்கம் உள்ள விவசாயிகளுக்கு நான் சொல்வதுபோல் பாதை இல்லை என்றால் சரியல்ல. எனவேதான் தாவா சொத்துக்கு வடக்கு பக்கம் விவசாயிகள் அனைவரும் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பாதை கிடையாது என்றாலும் 3ம் வாதி தருமன் அவருடைய சொத்தின் கிழக்கு பக்கம் வீடு கட்டியுள்ளதால் அவருடன் நா்ன கூட்டு சேர்ந்து கொண்டு கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல . வழக்குரைஞா் ஆணையர் நியமித்து பார்த்தால் எந்த பக்கம் பாதை உள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். அந்த பாதையை அழித்துவிட்டார்கள். அதனால் தாசில்தாராிடம் மனு கொடுத்தோம். எப்போது கொடுத்தோம் என்று ஞாபகம் இல்லை. அந்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றாலும் தாவா சொத்துக்கு மேற்கு பக்கம்தான் பாதை உள்ளது என்றாலும் சரியல்ல. 1 முதல் 12 பிரதிவாதிகள் அவா்கள் சொத்தை விற்க முயற்சி செய்யவில்லை பாகப்பிரிவினை செய்ய முயற்சி செய்தார்கள். பிரதிவாதிகள் இடத்தை விற்க முயற்சி செய்தார்கள் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை. பிரதிவாதிகள் சொத்தில் நான் வசதி உரிமை சட்டத்தின் கீழ் நான் பாதை கேட்க முடியாது என்றால் சரியல்ல பாதை உள்ளது. பி பட்டியல் சொத்துக்கு விளமப்புகை பரிகாரமோ தடை உத்தரவு பரிகாரமோ கேட்க சட்டப்படி எனக்கு உரிமை இல்லை என்றால்சரியல்ல. ஏ1 , பி1 , ஏ2, பி2 , டி,1 சி1 வழியாகத்தான் பயன்படுத்தி வந்தோம் என்று நான் சொல்லியுள்ளது வழக்கிற்காக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு மேற்கு பக்கம் பாபு ரெட்டியார் மகன் ராமரெட்டியார் மற்றும் ஜானகி அம்மாளின் வகையறாவின் நிலம் உள்ளது என்றால்சரிதான். அந்த வழியாகத்தான் வண்டி பாதை செல்கிறது என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்துக்கு பிரதிவாதிகளின் தந்தை வரதன் தான் உரிமையாளா் என்றால் சரிதான். அவா் இருந்தால் என்றைக்கோ ரோடு போட்டிருப்பார். வரதனிடம் நா்ன விலைக்கு கேட்டேன் என்றும் அவா் கொடுக்காதால்தான் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. 12 பிரதிவாதிகளுடன் எனக்கு சண்டை எதுவும் இல்லை. தற்போது வரை பேசிக் கொள்வோம். நான் சொல்வது உண்மையல்ல என்றாலும் முன்விரோத்தின் காரணமாகத்தான் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. முன்விரோதமே கிடையாது. வழக்குரையுடன் நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் உள்ளவாறு பூமியில் இடம் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் பேரில் இன்றுவரை தாவா சொத்தை பார்வையிட வில்லை . மனு நிலுவையில்தான் உள்ளது.

*ஒம். வே. இருதயராணி,*

மாவட்ட உரிமையியல் மற்றும குற்றவியல்

*நடுவர், உத்திரமேரூர்.*